


முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர், கருவூல கணக்குத்துறை திரு. தென்காசி சு. ஜவஹர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் இன்று (08.11.2016) நடைபெற்றது.

செ.வெ.எண்: 782/2016 நாள்: 08.11.2016

**முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர், கருவூல கணக்குத்துறை திரு. தென்காசி சு. ஜவஹர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (08.11.2016) நடைபெற்றது.**

முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர், கருவூல கணக்குத்துறை திரு. தென்காசி சு. ஜவஹர் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், ஓய்வூதியர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் இன்று (08.11.2016) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர், கருவூல கணக்குத்துறை, திரு. தென்காசி. சு.ஜவஹர். இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அனைத்து சலுகைகளையும் கருவூல துறை மூலமாக முழுமையாக செய்து வருகிறது. சலுகை பெறாதவர்கள் நேரடியாக என்னிடம் தொடர்பு கொண்டு உங்களுடைய குறைகளை தெரிவிக்கலாம் என்றும், அரசுத்துறையில் 30, 40 ஆண்டுகளாக பணிபுரிந்து இந்நாட்டிற்காகவும், மக்களுக்காகவும் உழைத்த உங்களுக்கு ஓய்வூதிய இயக்குநரம் ஓய்வூதியதாரர்களுக்கு செய்யும் உதவிகளுடன் கருவூலத்துறையும் சேர்ந்து உதவி செய்ய தயாராக உள்ளது என்றும் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து 75 ஓய்வூதியர்களுக்கு ரூ.20 இலட்சத்து 280/-க்கான காசோலைகளை வழங்கினார்.

பின்னர் ஓய்வூதியர்களிடமிருந்து பெறப்பட்ட 99 விண்ணப்பங்களில் 68 விண்ணப்பங்களுக்கு தீர்வு காணப்பட்டதுடன், 31 விண்ணப்பங்கள் தொடர்பாக துரித நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

கூட்டத்தில் ஓய்வூதிய இயக்குநர் திரு. நாஸிர் ஹூசைன், இணை இயக்குநர் புதிய மருத்துவ காப்பீட்டு திட்டம் திரு. மகாபாரதி, மண்டல இணை இயக்குநர் முனைவர். கே.எஸ்.முத்துப்பாண்டியன், இணை இயக்குநர் திரு. இராமச்சந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்கு) திரு. பா. லெட்சுமி நாராயணன், மாவட்டக் கருவூல அலுவலர் திரு.கா.பாலகிருஷ்ணன், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்கள் கலந்து கொண்டனர்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.